அவலூர்பேட்டை ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : R.S.செல்வம் B.Sc.,

க.எ.ண் : 1/2024

நாள் : 23.05.2024

பொருள் : மனைப்பிரிவு, மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், அவலூர்பேட்டை ஊராட்சி ச.எண் : 67/9B, 69/1, 69/2, 69/5A2B, 69/6, 69/7 ல் ஏக்கர் 3.40 (அ) 13775 ச.மீ பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் - சார்பு

படிக்க :

1. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [UD(3)] துறை நாள் : 23.09.2020
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் அவர்களின் இணையதள வழி எண் 06VHGE30/2024 TJTCP நாள் : 04.04.2024
3. அவலூர்பேட்டை ஊராட்சி தீர்மான எண் : 37/20.05.2024
4. தானபத்திரம் எண் : 655/2024 நாள் : 27.03.2024
5. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா - விழுப்புரம் கருவூலம் (மு) சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா - ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, அவலூர்பேட்டை கிளை செலுத்தும் சீட்டு நாள் : 22.05.2024

உத்தரவு :

மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம் அவலூர்பேட்டை ஊராட்சி ச.எண்கள் 67/9B, 69/1, 69/2, 69/5A2B, 69/6, 69/7 ஆகியவற்றில் ஏக்கர் 3.40 (அ) 13775 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தினை மனைப்பிரிவுகளாக வரன்முறைப்படுத்திட, பார்வை (1)-ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (2)-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை (3)-ல் (மு) (4)-ல் காணும் ஊராட்சியின் தீர்மான மற்றும் தானப்பத்திரம் அமைந்துள்ள இடத்தினை ஸ்தல ஆய்வு செய்து மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்த அனுமதி வழங்குமாறு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பார்வை (5)-ல் காணும் விவரப்படி புன்செய் வகைபாட்டில் இருந்த மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன்மாற்ற கட்டணமாக உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்குண்டான கட்டணம் ரூ.40,800 மற்றும் கூராய்வு கட்டணம் ரூ.85,000 - (85*1000) அவலூர்பேட்டை VP.233331 இந்தியன் வங்கி கிளை வாயிலாக செலுத்தி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விவரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசுத்தலைப்பு - 021760800AS22709

வ எண்	விஸ்தீரணம்	சர்பதிவாளர் சந்தை மொத்த மதிப்பு ரூ.(ச.மீ)	3% நில மாற்று கட்டணம் ரூபாய்
1.	ஏக்கர் 3.40 (அ) 13775 ச.மீ 67/9B, 69/1, 69/2, 69/5A2B, 69/6, 69/7	1360000	40800
			40800

ரூ.40,800 (நாற்பது ஆயிரத்து எட்டுநூறு மட்டும்)

நிபந்தனைகள் :

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட் ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பாட்டின், மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
2. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அனுமதி பெறவேண்டும். மேலும் நீர்நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என தெரியந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி அனுமதி ரத்து செய்யப்படும்.
3. மேற்படி மனைப்பிரிவிற்கு ஊரக வளர்ச்சித்துறையால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உரிய துறையினால் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும்.
4. மேற்படி புதியமனைப்பிரிவில் தார் சாலை, பூங்கா, உள்ளாட்சி-A (மு) மின்சார துறை-B ஆகியன தானமாக அவலூர்பேட்டை சார்பதிவாளர் ஆவண எண். 655/2024 நாள் : 27.03.2024-ன் படி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
5. மேற்படி புதியமனைப்பிரிவில் தார் சாலை, தெருக்களின் பெயர் பலகைகள், மனையின் உயர்மின்னழுத்த கம்பிகள் செல்லுமாயின் அதனை மெற்படி மனை உரிமையாளர் தனது சொந்த செலவில் செய்துகொள்ளவேண்டும்.

மேற்காணும் நிபந்தகைகளுக்குட்பட்டு, அவலூர்பேட்டை ஊராட்சி (மு) கிராமம், ச.எண். : 67/9B, 69/1, 69/2, 69/5A2B, 69/6, 69/7 ல் ஏக்கர் 3.40 (அ) 13775 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள 85 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

R.S.

தலைவர்
ஊராட்சி மன்றம்
அவலூர்பேட்டை ஊராட்சி

பெறுநர் :

திரு. P.பச்சையப்பன்
த/பெ பெரியப்பு
பைபாஸ் சாலை
அவலூர்பேட்டை,
மேல்மலையனூர் Tk,
விழுப்புரம் Dt - 604 201.

நகல் : வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு தகவலுக்காகப், பணிந்தனுப்படுகிறது.

நகல் : உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) விழுப்புரம் அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்படுகிறது.

நகல் : சார்பதிவாளர், அவலூர்பேட்டை

நகல் : வட்டாச்சியர், மேல்மலையனூர்